'' இன்று (28-1-1981) முற்பகல் 11-50 மணி அளவில் காவலை மீறி சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திற்கு வலுவில் நுழைந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை. வேப்பேரி, தாணாத் தெருவில் 20 ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு. அப்துல் லத்தீப்பின் மகன் சிந்தா சாஹுல் அமீது என்று சொல்லிக் கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிகிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

4. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

ஊ. பேரவை அலுவல்,

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: 28-1-1981 ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் பற்றிய திருத்திய நிகழ்ச்சி நிரலின் விவரம் பின்வருமாறு:—

29-1-1981 (வியாழக்கிழமை)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்-தொடச்சி
30-1-1981 (வெள்ளிக்கிழமை)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடர்ச்சியும், பதிலுரையும்.
31-1-1981 (சனிக்கிழமை)	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.
1-2-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.

2-2-81 (திங்கட் கிழமை)	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது 1979-80 ஆம் ஆண்டிற்கா துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்-தொடர்ச்சி.
3-2-1981 (செவ்வாய்க்கிழமை)	பேரவைக் கூட்டம் இல்லை.
4-2-1981 (புதன்கிழமை)	அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்.
5-2-1981 (வியாழக்கிழமை)	
6-2-1981 (வெள்ளிக்கிழமை)	1980-81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும், அதற்கான நிதி ஒதுக்க சட்டமுன் வடிவு அறிமுகம் செய்தலும்.
7-2-1981 (சனிக்கிழமை)	அரசு அலுவல்கள்.
8-2-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
9-2-1981 (திங்கட்கிழமை)	(1) நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். (2) இதர அரசு அலுவல்கள்.
(10-2-1981) (செவ்வாய்க்கிழமை)	அரசு அலுவல்கள்.
	பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 29-1-1981 ஆம் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

162. தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்தின் 1971-72 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. (ஆங்கிலம், தமிழ்) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு-வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 4/1971) 47 ஆவது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).